புதினப்பத்திரிகையாக
பதிவுசெய்யப்பெற்றது.

இந்துசாதனம்.

ஸ்தாபிதம் (1889)
வைகாசி மீ ௨௪
[illegible]

THE HINDU ORGAN

சோமவாரத்திலும், குருவாரத்திலும் பிரசுரமாகும்.

"எனைத்தானு நல்லவைகேட்க வனைத்தானு, மான்ற பெருமை தரும்,"

பத்திரக் கிரயம்.

யாழ்ப்பாணப் பட்டினம்: ஆ 1-க்கு	ரூ.	5-00
இலங்கை, இந்தியா:	" ரூ.	8-00
தொலைவாய்ப்பகுதி:	" ரூ	9.00
தனிப்பிரதி:		சதம் 5

முற்பணம் அனுப்புவோருக்கே பத்திரிகை அனுப்பப்படும்.

விளம்பர விகிதம்.

முதன்முறைக்கு:—ஒருகலம்		ரூ. 9-00
"	அரைக்கலம்	ரூ. 4-50
"	காற்கலம்	ரூ. 3-00

அடுத்த முறைகட்கு டெ விகிதங்களிற் பாதி.
விளம்பரங்கள் முற்பண மனுப்பினலன்றிக் கவனிக்கப்படா

புத்தகம்—௪௨. } யாழ்ப்பாணம்;-பிரமோதூதவூ ஆடிமீ ௬ௗ, (1930 ஜூலாய் 21) திங்கட்கிழமை. { இலக்கம்—௫௰.

உ

கணபதி துணை.

சீர்பூத்த கருவிநு அணர்ச்சி தேங்கச்
செம்பூத்த சிகமாக மங்க ளோங்கப்
பார்பூத்த புறச்சமய விருள்க ணீங்கப்
பரம்பூத்த சைவநிலை பாரோர் தாங்கப்
பேர்பூத்த சிவானந்தத் தினிது அங்கப்
பிறைபூத்த சடைமவுலிப் பிரானூர்தந்த
வார்பூத்த வறிவிச்சை தொழிலென்றேழு
மதம்பூத்த விநாயகன்றன் வணங்கிவாழ்வாம்.

வாழ்க வந்தணர் வானவரானினம்
வீழக தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல் லாமர னாமமே
சூழக வையக முந்துயர் தீர்கவே.

ஸ்ரீ கதிர்காமம்
கதிரமலைத் தண்ணீர்ப்பந்தர்த் திருப்பணித் தர்ம இயல்பு.

கதிரைமலை கடுமலையி லுள்ள முத்து மாணிக்க விநாயகப் பெருமான உததரவு பெற்று வருஷா வருஷம பக்தகோடி அடியார்கள் பொருளுதவியால் நடந்தேறிவரு கிற டீ தண்ணீர்ப்பந்தல் மேன்மேலும நடந்தோங்கி வருவதற்குப் பெரும் பொருள் வேண்டும்.

கனதனவான்களாகிய சகல புண்ணிய சிலர்களும் தங்கள்தங்களால் இயன்றளவு உதவும பணம் அனுப்பும விபரம்:—

யாழ்ப்பாணம் தீவுப்பற்று மணியம் வேலணை ஸ்ரீ மு. சோமசுந்தரம்பிள்ளை அவர்களிடம அனுப்பவும்.

முத்துமாணிக்க வேல்சாமி சீடனாகிய
சி. வீரவாகுப்பிள்ளை குமாரன்
வீ. ஆ. துரைசுவாமிப் பரதேசியார்,
(Y. 66. 31-12-30.) கதிரமலை.

யாழ்ப்பாணம் ஐக்கியலாபநிதி.

வங்கிக்காரர்

1918-ம்ஆ ஸ்தாபிதமானது — மூலநிதி 8 லட்சம் ரூபா..
இதுவரையிற் கொடுபட்ட பங்குப்பணம் ரூபா 1,64,706
100 **ரூபா விகிதமான** 8000 **பங்குகள்.**

பங்குப்பணங் கட்டுமுறை.

பங்கொன்று 1 ரூபா விகிதமாக 75 மாசகாலத்திற்கு மாசந்தோறும் கட்டப்படவேண்டியது குறித்தகாலமுடிவில் பங்கொன்றுக்கு ரூ 100 திருப்பிக்கொடுக்கப்படும். பங்குகள் எந்தநேரமும் வாங்கலாம்.

தினசரிப் பற்றுவரவு.

எச்சநிதி சராசரி 500 ரூபாவிற்குக் குறையாமல் இருக்குமானல் 3 விகித வட்டியுடன் தினசரிப்பற்றுவரவு செய்யலாம்.

தவணைவரையறுக்கப்பட்ட க்ஷேமப்பணம்.

க்ஷேமப்பணம் 3 மாசம், 6 மாசம், 12 மாசம் என்னுங் காலங்கள் வரையறுத்து ஏற்கப்படும். வட்டியும் முறையே 3 விகிதம், 4 விகிதம், 6 விகிதமாகக் கொடுக்கப்படும்

உண்டியல்கள்.

கொழும்பிலுள்ள "நாஷனல்" வங்கியிலும், "இம்பீரியல்" வங்கியிலும் இந்தியாவிலுள்ள பிரதான பட்டினங்களிலும் மாற்றத்தக்கவிதமாகக் கொடுக்கப்படும். தொலைவாய்ராச்சியப்பகுதியிலுள்ளவர்களுக்குக் கொடுக்கவும் வாங்கவுமான விசேஷ ஒழுங்குகள் செய்யப்பட்டிருக்கின்றன.
இந்தியனோட்டு வட்டத்திற்கு மாற்றிக்கொடுக்கப்படும்.

கடன்

நகைகள் ஈடுவைத்துக்கொண்டு கடன் கொடுக்கப்படும். மாசந்தோறும் கட்டுபவர்களுக்கு 10 விகிதமான வட்டியும் ஏனையோர்க்கு 12 விகிதமான வட்டியும் விதிக்கப்படும். (ஈடுவைத்தவர்கள்) முதலையும் பாகம்பாகமாகக் கொடுக்கலாம்.

காணி, தானியங்கள், சில முதலாம் பழுதபடாத பொருள்களையும் ஈடாகவைத்துக் கொண்டு தக்க பிணையுடன் கடன் எடுக்கலாம் (இந்தக்கடனையும் பாகம் பாகமாகக் கட்டித் தீர்க்கலாகும்.)

இன்னும் வேண்டிய விபரங்களை மானேசர் மூலமாக அறிந்துகொள்ளலாம்.
(Y. 72. 21-8-30.)

நோவினல் வருந்துவோர்!

முதன் முதல் நினைப்பது எதாவது தைலத்தைப் பற்றியே அதாவது சீக்கிரத்தில் சுகங் கொடுக்கக் கூடிய தைலம். அதுதான்.

லிட்டில்ஸ் ஓரியென்டல் பாம்.

ஆதித்தைலமும், இந்த நோவுகளை நிச்சயமாய்க் கண்டிக்கக் கூடியதும் இதுவே.

தலை வலி
நாம்பு வலி
கில் வாய்வு
இடைப் பிடிப்பு
வாதம்
சுளுக்கு
முதலிய நோய்களுக்கும்

இதிற் கொஞ்சந் தடவை நிரம்பிய சுகங் கிடைக்கும்.

(8—28) Little's Oriental Balm and Pharmaceutics Ltd., Madras

(Y. 51. 31-12-30)

சாலாமிஸ்திரி லேகியம்.

இந்த லேகியத்தை யான் அநேக பிரபுக்களுக்குச் செய்து கொடுத்துப் பல வியாதிகளைக் குணப்படுத்தியதால் அவர்கள் மனமகிழ்ந்து வெகுமதிகளையும் கொடுத்திருக்கிறார்கள். இதை நான் விளம்பரத்தில் உலகன் மைக்காகப் பிரசுரித்திருக்கிறேன். ஆனல் பிரபுக்கள் மாத்திரமல்ல ஏழைகளும் இதனுலுண்டாகுஞ் சுகத்தை அடையும்படி பொதுஜன நலத்தைக்கருதியே இப்போது இந்த லேகியத்தைப்பற்றிப் பிரசுரித்து வருகிறேன்.

இது சாலாமிஸ்திரி, குங்குமப்பூ, லௌஜித், கஸ்தூரி, குமரஸ்தாகர, பிதாரு, சாலாமூஸ்லி, சப்பேமூத்ஸ்லி, கிஸ்நாலை, சர்ப்பருப்பு, பாதம்பருப்பு, சாத்தாவாரி, கீர்முன்னிவிதை, ச்ரகப்பூ வங்கபஸ்பம், அப்ரக்பஸ்பம், பவளப்பஸ்பம், வெள்ளிபஸ்பம், அயகாந்த செந்தூரம் சாம்பிராணிப் பதங்கம் இன்னும் அநேக புஷ்டியான மூலிகைவகைகள் சேர்த்துச் செய்யப் பெற்றிருக்கின்றது.

இதனல் சீதழிவு, சீக்கப்டு, சீரடைப்பு, மூலச்சூடு, சிருவருஷத்துள் உண்டாயிருக்கும் பக்கவாய்வு, இருமல், காசம் பித்தகாமாலை, பித்தபாண்டு, பீனிசம், கைகால் காந்தல், வலி, இடுப்புவலி, பக்கவாய்வு இன்னும் அநேக கடுமையான வியாதிகள் தீரும். ஸ்திரீகள் இந்த லேகியத்தைச் சாப்பிட்டுவந்தால், மேற்சொல்லிய வியாதிகள் சுகமடைவதுடன் ருதுக வாய்வு, பிரசவ அறையில் உண்டாகும் நோய்கள் தீர்ந்து தேகபுஷ்டியும் பலமும் பெறுவார்கள். பால் விருத்தியாகும்.

இந்த லேகியத்தின் விலை ருத்தல் ஒன்றுக்கு ரூபா ௨௦. அரைருத்தலுக்கு ரூபா ௧௦. கால் ருத்தலுக்கு ரூபா ௫. தபாற்செலவு பிரத்தியேகம்.

சிங்கப்பூர் பினங்கு முதலிய தொலைவாயிராச்சியப்பகுதிக்கு வீ. பீ. சட்டம் இல்லாததினுல் முன்பணம் ஆடர் அனுப்புதல் வேண்டும்.

இங்ஙனம்,
க. ஆறுமுகம்பிள்ளை,
சிவஞான ஆரோக்கியசுகதாரவைத்தியசாலை
காத்தான்குடி போஸ்டு,
மட்டக்களப்பு,
Y.75. 31-12-30.) இலோன்.

The "New Lanka" Roadster Chromium Plated Bicycle.



இலங்கையில் மிக இலாபமான பொருள் முழுவதும் பிரிட்டினில் உண்டாயதென உத்தரவாதம்.

இந்த "சைக்கிள்" மேற்பரப்பில் போடப்பட்டிருக்கும் தகடு தண்ணீரினலாவது மழையினலாவது கெட்டுப்போவதுமில்லை நிறம் மங்குவதுமில்லை.

விலை ரூபா 75-00 ரொக்கம்

அல்லது

முதல்முறை ரூ. 10-ம் பிற்பாடு மாதவீதம் ரூ. 7-15 ஆக 10 மாசக் கட்டணம்.

SUB-AGENTS:-

M. A. Sinna Lebbe Bros,
Batticaloa.

Jayanoris Silva & Sugathadasa,
Trincomalee.

T N Lingam
Vannarponnai,
Jaffna

National Drapery Stores,
Anuradhapura.

R M C, de Silva
Main Street,
Ambalangoda.

L N de Silva
Matara.

SOLE AGENTS:

Colombo Stores, Ltd.
P. O. BOX 107. — COLOMBO.

(H. 74. 19 6 30 to 18 1 · ·).

விளம்பரம்.

கடை மாற்றம்.

யாழ்ப்பாணஐக்கியவியாபாரசங்கம்.

இச்சங்க வியாபாரக்கடை இந்தமாசம் ௧௭ (1-8-30) வெள்ளிக்கிழமை தொடக்கம் யாழ்ப்பாண ஆஸ்பத்திரி றேட்டில் முன் இவ்வியாபாரம் நடைபெற்ற கட்டிடத்திற்குக் கிழக்குப் பக்கமாகவும், செம்மாதெரு றேட்டுக்கும்வண்டிக்காலேக்கும் எதிராகவுப்போது புதிதாகக் கட்டப்பட்ட கட்டிடத்தில் வைத்து விலை சகாயமாகவும் நற்சரக்குகளாகவும் விற்கப்படும். எங்கள் பற்றுவரவுகாரர்களையும் ஏனையோர்களையும் இதைக் கவனிக்குமாறு கேட்டுக்கொள்ளுகிறேன்.

வ. மு. வியாகேசன்,
காரியதரிசி.

௧௯௩௦-ம் ஆ ஆடிமீ ௨௳ (17-7-30).
(Mis 11. 17, 21, 24)

இந்துசாதனம்.

யாழ்ப்பாணம்: பிரமோதூதஹு
ஆடிமீ ௬௳ திங்கட்கிழமை.

வடமாகாணப் பரிபாலனம்-1929.

3

மதுபரிபாலன விஷயமாக இம் மாகாணத் தலைவர் குறித்த 29=ம் ஆண்டு வெளியிட்ட அறிக்கைப் பத்திரத்திற் பிரதானமான சிலவற்றை எடுத்துக்காட்டி ஆராய்வோம்.

"பருத்தித்துறையில் ஒரு சாராயத் தவறணையும் வடமராட்சி, தென்மராட்சி, பச்சிலைப்பள்ளி யென்னும் பிரிவுகளில் 11 கள்ளுக்கடைகளும் இந்த 29-ம் ஆண்டில் திறக்கப்பட்டன. கள்ளுக் குத்தகையால் வந்த வருவாய் 75750 ரூபாவாகும். சாராயம் விற்றுக் கிடைத்த குத்தகைப்பணம் 26500 ரூபாவாகும். இவற்றால் வருவாய் மும்மடங்காகியது."

மேலும் தவறணைகள் உள்ள இடங்களில் சோர மதுபான வியாபாரம் குறைந்திருக்கிறதென்றும் இல்லாத இடங்களில் மதுபானிகள் அதிகபணத்தை இதன் பொருட்டுச் செலவு செய்கிறார்களென்றும், ஒரு சாராயத் தவறணையும் 11 கள்ளுக்கடைகளும் திறக்கப்பட்ட படியினால் குறித்த வருடத்தில் அந்நிய நாட்டுக் குடிவகை வரத்து எவ்வளவோ குறைந்துவிட்டதென்றும் இந்த உஷ்ண ஊராகிய யாழ்ப்பாணத்திலே, குடிக்கப் பழகியவர்களுக்குக் கள்ளு வேண்டியதுதானென்றும், ஆதலால் கள் எங்கும் கிடைக்கத்தக்கதாகச் செய்தல் நன்றென்றும் வடமாகாணத் தலைவர் அபிப்பிராயப்படுகின்றார்.

வடமாகாணத் தலைவருடைய கொள்கையை முழுவதும் பிழையென நாமுஞ் சொல்லேம். கள் சாராயத் தவறணைகள் திறக்கப்பட்டுள்ள இடங்களில் சோர மதுபான வியாபாரம் நடக்குமெனக் காத்திருக்கவேண்டியதில்லை. ஆனால் இங்ஙன இடங்களிலே கொலை கலகம் முதலிய குற்றங்களும் தீமைகளும் அதிகப்படுதல் பிரத்தியட்சம். கூலிவேலை செய்வோரே யாழ்ப்பாணத்தில் கள் சாராயத்தை அதிகம் வேண்டிநிற்கிறார்களென நமது மாகாணத் தலைவர் நினைக்கின்றார். இந்த விஷயத்தில் அவர் கொண்டுள்ள கொள்கை தவறென்னலாம். கூலிவேலை செய்வோரும் அவர் குடும்பத்தினரும் கள்ளுக்கடைகள் மூடப்பட்டபின் சமாதானத்தோடும் சந்தோஷத்தோடும் பொருள்பண்டத்தோடும் நல்ல நிலைமையிற் காணப்படுகின்றனர். இவர்களை அக்காலத்திற் பிடித்திருந்த தரித்திரமும் சஞ்சலமும் நீங்கிவிட்டன. மதுபானத்தை விடுத்த கூலிக்காரர் அதனால் தாம் இப்பொழுது அடைந்த நன்மைகளை உள்ளபடி யுணர்ந்திருக்கிறார்கள். மதுக்கடைகள் மூடப்பட்டமையினால் உண்மையாகச் சங்கடப்படுவோர் எவர்களெனில் மரமேறிகளும் இரகசியமாகக் குடிக்குஞ் சிலரும் மதுவியாபாரத்தால் முன் பொருளீட்டியவர்களும் மதுபரிபாலனப் பகுதியாருமேயாவர். கள்ளில்லாமல் சாராயமும் அந்நியநாட்டுக் குடிவகைகளும் இந்த உஷ்ண நாட்டிற்குச் சிறிதும் ஒத்துக்கொள்ளமாட்டாவென மாகாணத் தலைவர் சொல்வதை நாமும் ஒத்துக் கொள்ளுகிறேம். அப்படியானும் கள்ளை முன்னிருந்தபிரகாரம் பிரியமானவர் சேர்க்கவும் பிரியமானவர் நினைத்த இடத்திலே வைத்துக் குடிக்கவும் தக்கதாய் இப்பொழுதுள்ள கட்டுப்பாடுகளை யொழித்துவிட்டால் அதனால் நன்மையுண்டென்று சொல்லலாம். மதுபான விஷயமாக அதிக பொருளும் செலவழியமாட்டாது. இனி, மதுபானநீக்கத்தின் பொருட்டு உழைப்பவர் தொகை காலத்திற்குக் காலம் கூடுகின்றதென்றும், இத்தொகை கூடுவதற்குக் காரணம் சோரமாக மதுபானம் விற்போரும் கள்ளுக்கடைகள் இல்லாதபட்சத்தில் தாங்கள் பொருளை யீட்டிக்கொள்ளலாமென நினைத்து மதுபான நீக்கத்தின்பொருட்டு உழைப்பாரோடு சேர்ந்துகொள்ளுகின்றார்களென்றும் நமது மாகாணத்தலைவர் கூறுகின்றார். இக்கூற்று உண்மைக்கு நேர்விரோதமான கூற்றாகும். சோரமாக மது விற்பவரெவரும் இப்படிப் பயந்து பயந்து பெரும் அபராதப் பணத்தைக் காலத்திற்குக் காலம் இறுத்திறுத்து, சில்லறை மதுத்தெய்வங்கட்குக் காணிக்கை யிட்டு அவைகளின் வாயைக் கட்டிக் கட்டி இவ்வளவு கஷ்டங்களோடு பொருளீட்ட விரும்பார். இவர்களுக்கு இதனால் வரும் ஊதியத்தைக் காட்டிலும் வெளிப்படையாகக் கள்ளுச் சேர்த்து விற்றலால் பொருள் அதிகமாக வரும், அச்சம நீங்கிவிடும். ஆதலால் இவர்கள் கள்ளுக்கடை வேண்டாமென ஒருபோதுஞ் சொல்லமாட்டார்கள். மதுவிலக்குவோரின் தொகை கூடுவதற்கு உண்மையான காரண மென்னவென்றால், மதுபானத்தைச் சில வருடங்களாக விட்டிருப்பவர்கள் அங்ஙனம் விட்டமையினால் தாங்கள் அடைந்த நன்மைகளை உள்ளபடி உணர்ந்து தீய மதுபானத்தை ஒழித்து விடுவதற்கு மதுநீக்குவோரோடு தாமுஞ் சேர்ந்து உழைத்துவருதலேயாம்.

நமது அரசாங்க சபை.

இச்சபைக்கு அங்கத்தவர்களைத் தெரிவதற்கான வாக்காளர்கள் தம் பெயரைப் பதிவுசெய்து கொள்ளவேண்டியது. இதற்கு அவர்கள் ஒரு அச்சடித்த விண்ணப்பப் பத்திரத்திற் கைச்சாத்திட்டு அனுப்பவேண்டும். ஒரேவாக்காளர் ஒரு முறைக்குமேல் இரண்டாவது முறையும் ஒரு பதிவு விண்ணப்பப் பத்திரத்திற் கையொப் மிட்டதாகக் காணப்பட்டால் அந்த வாக்காளருக்கு ரூபா 100 அபராதம் விதிக்கப்படும் என்பது சட்டம்.

இச்சட்டம் வைப்பதினால் அறியாதவர்களாகிய வாக்காளரிடம் முதற் செல்லும் அபேட்சகர் பதிவுவிண்ணப்பங்களுக்குக் கையெழுதுப்போடுவித்துக் கொண்டுபோக, இரண்டாவதாச் செல்லும் அபேட்சகரும் இன்னொருவிண்ணப்பத்திற்குக் கையெழுத்திடச் சொன்னால், சட்டவிபரந் தெரியாத வாக்காளர் இதற்கும் கைச்சாத்திட்டுவிடுவார்கள். அப்படி இரண்டாம் முறையும் கைச்சாத்திட்டவுடன் அவர்கள் சட்டப்படி ரூபா 100 அபராதம் இறுக்கவேண்டியவர்களாகின்றனர்.

இனி, ஒரு அபேட்சகர் வாக்காளரிடம் சென்று முதன்முறையாக விண்ணப்பங்களுக்குக் கைச்சாத்துப் பெற்றுச் செல்கிறாரென வைத்துக்கொள்வோம். அப்படிப் பெற்றபின், இவர்களிற்சிலர் தனக்காக வாக்குக் கொடுக்கமாட்டார்களென அபேட்சகர் சந்தேகப்பட்டால் அந்த வாக்காளரின் விண்ணப்பங்களைக் கிழித்தெறிந்துவிடவுங்கூடும். அப்படியாகக் கிழித்து எறியப்பட்ட விண்ணப்பங்களுக்குக் கைச்சாத்திட்ட வாக்காளர் இரண்டாவதாகப் போகும் அபேட்சகர் கொண்டுசெல்லும் விண்ணப்பப்பத்திரத்தில் கைச்சாத்திட, சட்டத்திற்குப் பயந்து மறுப்பார்கள் ஆகவே இப்படியான நிலைமையில் அகப்பட்டவாக்காளர், வாக்காளராகப் பதிவு செய்யப்பெறும் உரித்தை இழந்துவிடுவார்கள். கடையிற் பெண்களும் தெருவில் ஆடவருமாகிய வாக்காளர் தமது பெயர் பதிவுசெய்யப் பட்டிருக்கின்றதோ அல்லவோ என்பதை எங்கே கண்டுபிடிப்பது அப்படிக் கண்டு பிடிப்பதற்கு அவர்கள் கவலை எடுக்கப் போவதும் இல்லை இந்த வில்லங்கங்களை அறிந்தோர் தொந்தரவு வேண்டாமென்று எவ்விதபத்திரத்திற்குமே கைச்சாத்திட மறுப்பவர் பல்லோராவர். ஆகவே வாக்காளரின் தொகை குறைவுறுவது நிச்சயம்.

இந்த நிலைமையை நன்குணர்ந்த கௌரவ டுகாதேவா அவர்கள் சென்ற சட்டசபைக் கூட்டத்திலே மேற்கூறப்பட்ட வில்லங்கங்களையெல்லாம் தெளிவாகவும் விரிவாகவும் சட்டசபையாருக்கு எடுத்துக்காட்டி, அதற்குப்பரிகாரமாக, வாக்காளரைப் பதிவு பண்ணும்வேலை தலைமைக்காரரில் விடப்படவேண்டுமென்னும் ஒருபிரேரணையைக் கொணர்ந்தனர். அப்பிரேரணை சட்டசபையின் அதிகப்பற்றோர் சம்மதத்துடன் தீர்மானமாக நிறைவேறிற்று

இப்போது நமது பிரதிதேசாதிபதி மேலேகுறித்த அத்தீர்மானத்தைத் தாம் ஒப்புக்கொள்ளமாட்டாரென்றும், அதற்கு நியாயம் சட்டசபையாரால் கடைசியாக அங்கீகாரம் பண்ணப்பட்ட டொனமூர் அரசியற்றிட்டத்தில் இவ்வகையாகத் தலைமைக்காரர்கள் பதிவுசெய்ய வேண்டுமென்ற நிபந்தனை யில்லாமையேயென்றும் கூறினர்.

ஆகவே முன்னுள்ள கோளாறு நீங்கியபாடில்லை. ஆனால் அதற்கு ஓர் சாந்தியாக எமது பிரதிதேசாதிபதி விண்ணப்பம் அனுப்பிய வாக்காளர் ஒவ்வொருவருக்கும் அரசாட்சியாரால் ஒரு அறிக்கை அனுப்பப்படும் என்றும், அதிலிருந்து அவர்களின் பெயர் வாக்காளர் நாமாவலியில் பதிவுபெற்றது பெறாததை யறிந்து கொள்ளலாம் என்றும், அரசினரின் அவ்வறிக்கை, பெறாதவர்கள் தம்மைப் பதிவுசெய்வித்துக்கொள்வதற்குக் குறிக்கப்பட்ட காலவெல்லைக்குமுன் தெரிந்து கொள்ளக்கூடுமென்றும் கூறுகின்றார்.

பூதரும், புஞ்சிறுவையும், முருகரும் முகம்மதுசேகுவும், காக்கையரும், வள்ளிநாச்சனும், நம்மேனிக்காவும், சின்னப்பிள்ளையும், சேகுநாச்சியாவுமா இந்த அறிக்கைகளை அறியப்போகின்றனர்? இவர்களைத் தேடியா தபாற் சேவகன அறிக்கைகளைக் கொடுக்கப்போகின்றனன்? இவர்களை எந்தச் சந்தையில் தான் சேவகன் கண்டுபிடிப்பது வீட்டிலிருக்கும்கிழவியிடம் அல்லதுகிழவனிடங்கொடுத்துவிட்டுப் போனால் அவர்கள் நினைவாக இதை வைத்துக் கொடுக்கப்போகின்றனரா?

ஊர்நிலைமை தெரியாதவர்கள் ஒரு ஊருக்குச்செய்யுந் திட்டங்கள் இவ்வாறான அலங்கோல நிலைமைகளையே கொண்டுவந்து விடுவனவாகும். இதையெல்லாம் கண்டறிந்தன்றோ சைமன் சங்கத்தார் இந்திய அரசியல் விசாரணைக்கு வந்த போது அதிகப்பற்றோர் அவர்களைப் பகிஷ்காரஞ் செய்தனர். இந்தியாவுக்கு இந்திய மக்களே தகுந்த அரசியலமைப்பை உண்டாக்கவல்லரென்று இந்தியா கூறியது இதனாலன்றோ!

இதுநிற்க, இப்போதாவது அடிமைத் திறத்தில் அழுந்திக்கிடக்கும் இலங்கையர் இதுவிஷயத்தில், ஆளுஞ்சாதியாராகும் ஆங்கிலேயரிடம் முழந்தாட்படியிட்டு இரண்டு கைகளையும் விரித்து மார்புக்கு நேரேபிடித்து மேலே ஏறெடுத்துப் பார்த்து விநயத்துடன் பெற்றுக்கொள்ளக்கூடிய சகாய மொன்றுளது. அஃதென்னவெனில், வாக்காளர் பதிவுபண்ணப்பட்டிருக்கின்றனர் என்று அரசினரால் அனுப்பப்படும் அறிக்கைகள் அந்தந்தப்பகுதித் தலைமைக்காரரிடம் கொடுபட்டு, அத்தலைமைக்காரர் குறித்த வாக்காளரிடம் அவ்வறிக்கையைக் கொடுத்து அப்படிக் கொடுபட்டதை ஒரு புத்தகத்திற் பதிவுசெய்து வைத்துக்கொள்ளுமாறு உத்தரவளிக்கும்படி அரசினரைக் கேட்பதேயாம்

காருண்ணிய அரசினர் இதற்கு இடங்கொடுப்பரேல் ஒரு குறித்த கிராமத்திற்குச் செல்லும் அபேட்சகர் அக்கிராமத் தலைமைக்காரரின் புத்தகத்தைப்பார்த்து இன்னின்னார் பதிவுபெற்றிருக்கின்றனர் என்று அறிந்துகொள்ள முடியும் அப்படி அறிந்தபின் பதிவுபெறாத மற்றையோரிடம் விண்ணப்பப் பத்திரங்களுக்குக் கைச்சாத்துப் பெற்று பதிவுக்கு அனுப்புதல் கூடும்.

வாக்காளரைப்பதிவுசெய்தல் அரசினர் பொறுப்பாகவேயிராது அபேட்சகர்கள் பொறுப்பாகவே இப்போதுள்ளமாதிரியிருக்கும் வரையில் முன்பதாகவூருக்குச் சென்று கைச்சாத்துகள்பெற்ற அபேட்சகர் எவ்வளவு தகுதியற்றவரா யிருந்த போதிலும்—சமிக்கையாகத் தெரிவு பெறுவர். ஏனெனில் கல்வியறிவு, நாகரிகம்முதலியன ஒருசிறிதுமற்ற வாக்காளர்கள் முதல் கையெழுத்துப் பெற்றவருக்கே சொல்லவேண்டுமென்றே நினைத்துக் கொள்வர். அவ்வாறே அவர்களுக்கும் சொல்லிவைக்கவும்படும்.

இது எப்படியிருந்தாலென்ன, இந்த அரசாங்க சபைக்கு யார் போனாலென்ன போகாதுவிட்டாலென்ன தெரிவு பெற்றுச் செல்லும் அங்கத்தவர்கள், அரசாட்சிப் பொக்கிஷாதிபதிக்கும், உத்தியோகப் பகுதித் தலைவர்கட்குமிடையே கொண்டேசடிகளாகத்தானே இயங்குவர். வேறென்ன செய்யப்போகின்றனர்!

ஆப்தர் வாக்கியங்கள்.

மஹாத்மாகாந்தி வெளியிட்டவை.

(முற்றொடர்.)

சாத்துவிக எதிர்ப்பு மனத்திலுள்ள ஆத்திரத்தை வெளிவிடும் வழியாகும்; அரசினரின் தீமைகட்கெல்லாம் வாய்ப்பான தடையுமாகும்.

* * *

அரசினர் முறையாக அக்கிரமஞ் செய்யும்போது அதனைத் தடுத்தற்குச் செய்யத்தக்க மேலான முறை சாத்துவிக எதிர்ப்பேயாகும் பிரமாணங்களை விதிக்கும் விஷயத்திற் சிறிதும் சம்பந்தமில்லா புறக்கணிக்கப்பட்ட சனங்கள் கை கொள்ளத்தக்க பிரத்தியட்சமான மரு தும் இதுவே

* * *

சாத்துவிக எதிர்ப்பு பிரஜையாயுள் வனுக்குப் பிறப்புரிமையாகும் இதனை கைவிடுவனேல் அவன் மனுஷனாக மதி கப்படமாட்டான். சாத்துவிக எதிர் பின்பின் ஒருபோதுங் கொடுங்கோன்மை வரப்போவதில்லை.

* * *

பிரமாணங்களை மீறி அக்கிரமஞ் வோரை அரசினர் தக்கபடி அட யாளுதல்வேண்டும் அப்படிச் செய் விட்டால் இராச்சியம் கெடும் ஆனால் சாத்துவிக எதிர்ப்புச் செய்வோரை அடக்குமுயல்வது மனச்சாட்சியைச் சிறை வைப்பதற்கு ஒப்பாகும்.

* * *

சாத்துவிக எதிர்ப்பினாலே பலமும் தூய்மையுமுண்டாம் சாத்துவிக எதிர்ப்பைக் கைக்கொண்டவன் ஒருபோதும் ஆயுதத்தைக்கைக்கொள்வதில்லை. சனங்களின் அபிப்பிராயத்தையொட்டி பரிபாலனஞ் செய்யும் அரசினருக்குச் சாத்விக எதிர்ப்பினால் எவ்வகையான தீமையுமில்லையாம்.

* * *

அக்கிரமத்தோடு கூடிய அரசாங்கத்தில் ஒத்துழைப்பவன் அந்த அக்கிரமத்தில் தானும் பங்கு பற்றிக் கொள்ளுகிறான்.

* * *

முரட்டுத்தனமான எதிர்ப்பை விடுத்துச் சாத்துவிக எதிர்ப்பைக் கைக்கொள்ளத்தக்க விதமாகப் பாரதமக்கள் இப்பொழுதுமேலான நிலையை யடைந்திருக்கின்றனர்.

* * *

வரிகொடாமை ஒரு சுதந்திரமென்று சொல்லத்தக்கது; இதனால் வரியிறுப்பவர்கள் செல்வமடைவதல்ல, ஆனால் இப்படி மறுப்பதினாலே வரியிறுக்காதோர் வாயிலாகச் சாதியாரெல்லாரும் செல்வமடைவர்.

* * *

நான் விரும்புங் குணங்கள் சத்தியமும் சாத்விகமுமேயாகும்; நான் மனுஷனுக்கு அதிதமான வல்லமையோடு கூடியுள்ளேனென்று என்னைச் சொல்லமாட்டேன். எனக்கு அவைகள் வேண்டியனவுமல்ல. இங்குள்ள என் சகோதரர்களைப்போல நானும் தோல் நரம்பு தசை முதலியவற்றால் ஆக்கப்பட்டயாக்கையையுடையவன். ஆனதினால் நானும் ஏனையோர் போற் பிழைகள் செய்தல் கூடும்.

* * *

நீடித்த முரட்டு யுத்தத்தால் எவ்வளவு தீமை வருமோ, அவ்வளவு தீமையும் பெலஹீனமும் அரசினருடன் ஒத்துழைத்தலினாலும் ஏற்படும்.

* * *

அரசினர் மூலமாக எந்த வெள்ளம் பிரவாகித்து ஓடினாலும் நான் அதற்குப் பயப்படமாட்டேன். ஆனால் சனங்கள் எனக்காக இல்லையேல் என்பெயரைச் சொல்லி அரசினரை நிந்திப்பரேல் அதன் நிமித்த பெரிதும் மனம் வருந்துவேன்.

* * *

சாத்விக எதிர்ப்பைப் பற்றிப் போதிக்கவேண்டாமென்று எனக்குச் சொல்வது, சமாதானத்தைப்பற்றிப் போதிக்க வேண்டாமென எனக்குச் சொல்வது போலிருக்கும். இப்படிக்கேட்பது என்னைத் தற்கொலை செய்யும்படி கேட்டலை ஒக்கும்.

* * *

முரட்டுத்தனமான யுத்தத்தைத்தடுக்க வேண்டுமென்று முயற்சி செய்தேன். அதனைத் தடுத்து விடத்தான்வேண்டும். சாத்விகமே என் முதல் நம்பிக்கை. என் சாதியாருடைய கடைசி நோக்கமும் அதுவே (தொடரும்)

மநுதர்மசாஸ்திரம்.

முதல் அத்தியாயம்.

[வண்ணை: வை. இ.]

(சென்ற சோமவாரத் தொடர்ச்சி)

காலத்தின் கணக்கையறிதல்.

புருடன்தேகமே பரிசுத்தம். அதில் தொப்புளுக்குமேல் அதிக பரிசுத்தம். ஆகையால் அந்தப் பிரமாவின் முகம் மிகப்பரிசுத்தமாயிருக்கிறது.

அந்தப்பிரமாவின் முகத்திற் பிறந்ததாலும், வேதத்தைத் தரிக்கிறதினாலும், க்ஷத்திரியாதிவருணத்தாருக்குத் தருமத்தை உபதேசிப்பதாலும், இந்த உலகத்தில் பிராமணன் தருமமாயுயர்ந்திருக்கின்றான்.

அந்தப் பிராமணனைச் சுயம்புவான பிரமாவானவர் தேவபிதுர்களுக்கு எக்கியம் சிரார்த்தம் முதலியவைகளால் திருப்தி செய்யும் பொருட்டும் மற்ற வருணத்தாரைத் தர்மோபதேசஞ் செய்து இரட்சிக்கும் பொருட்டும், தவஞ்செய்து தன்முகத்தினின்றும் முன்பு உண்டாக்கினாரன்றோ.

எந்தப் பிராமணனுடைய வாயினாலே சொல்லப்பட்ட மந்திர பலத்தால் தேவர்களும் பிதுர்களும் தத்தம் அவிப்பாகங்களை அடைகின்றனரோ, அந்தப் பிராமணனைவிட எந்தப்பிராணி உயர்ந்திருக்கின்றது

சராசரங்களுக்குள் பிராணனுள்ள புழு முதலிய வுயர்ந்தன. அவைகளைப்பார்க்கிலும் அறிவோடு சீவிக்கிற பசு முதலியவை உயர்ந்தன. அவற்றினும் மனிதர்கள் உயர்ந்தவர்கள். அவர்களினும் வேதமோதும் அந்தணர் உயர்ந்தவர்கள். அவரினும் வேதப்பொருளையறிந்த பண்டிதர்கள் உயர்ந்தவர்கள். அவரினும் விதிவிலக்குகளை நிச்சயமாயறிந்தவர்கள் உயர்ந்தவர்கள். அவரினும் விலக்கியவற்றையொழித்து விதித்தவற்றைச் செய்பவர்கள் உயர்ந்தவர்கள். அவரினும் விருப்புவெறுப்பின்றிப் பிரமத்தையறியும் ஞானிகள் உயர்ந்தவர்களாம்.

பிராமணன் பிறப்பானது தருமத்தின் அழிவில்லாத உருவமாகவிருக்கின்றது. தருமம் விளங்குவதற்காக உற்பவித்த அப்பிராமணன் ஞானத்தினாலே மோட்சத்தையடைகிறான்.

பூமியிற் பிறந்திருக்கின்ற பிராமணன் பெருமை பெற்றவனாய்ச் சகலவருணத்தாருடைய தருமமென்னும் பொக்கிஷத்தை அரசன்போற் காப்பாற்றுகின்றான்.

பிராமணன் முதல் வருணத்தானானதாலும் பிரமாவின் முகமாகிய உயர்ந்தவிடத்திற் பிறந்ததினாலும், இந்த உலகத்திலுண்டாயிருக்கிற சகல வருணத்தாருடைய பொருளையும் தானம் வாங்க அவனே பிரபுவாகிறான்.

ஆதலால் பிராமணன் ஒருவன் இடத்தில் தானம் வாங்கினாலும் தன்பொருளையே சாப்பிடுகிறான். தன்வஸ்திரத்தையே உடுத்துகிறான் தன்சொத்தையே தானஞ்செய்கிறான். மற்றவர்கள் அவன் தயையினாலே அவற்றை யநுபவிக்கிறார்கள். [பிராமணனுடைய லக்கணம் முன் கூறப்பட்டது—வை. இ.]

(வரும்.)

இலங்கை வைத்தியப் பகுதிப் புதிய தலைவர்.

பலஸ்ஸையின் காட்டிலே பகிரங்க சுகாதார நிலையத்தின் உதவிக்காரியகர்த்தராயிருந்த டக்டர் R. பிறின்ஸிவ் என்பவர் இலங்கை வைத்தியப்பகுதியின் தலைவராக நியமனம் பெற்றுக் கடமை பார்க்கின்றனர்.

தீயினால் விபத்து.

கொழும்புப் பாலத்துறையிலே சென் ஜோசப் தெருவிலிருக்கும் மாட்டின் கம்பனியாரின் றப்பர்க் குதம் தீவாய்ப்பட்டது. அங்கிருந்த கொப்பறாவும் மோசம் போனது. கருப்பவிக்கும் யந்திரம் இரண்டுமணிநேரம் வரையில் இத்தீயை அவிப்பதில் பிரயத்தனப்பட்டதாம்.

பிரதம நீதிபதியின் நியமனம்.

இலங்கைச்சனமஹாசபையின் தீர்மானம்.

குறித்த நியமனத்தைப்பற்றி, இலங்கைச் சனமஹாசபையாரின் அதிகாரசங்கத்தார் பின்வரும் தீர்மானத்தை நிறைவேற்றியிருக்கின்றனர்:-

நீதிபதிகளின் அவர்களுடைய உரிமையைக் கவனியாது இலங்கையைவிட்டு வேறு இடத்திலிருந்து பிரதம நீதிபதியை இலங்கை உயர்தர நீதிமன்றத்திற்கு அரசினர் தெரிவு செய்ததை இச்சங்கம் கண்டனம் செய்கின்றது; என்பதாம்.

உரும்பராய்க்கு பொலிஸ்காவல்.

உரும்பராயிலே பள்ளிக்கூடம் முதலியவற்றை எரித்தும் வேறுவகையானவும் குற்றங்கள் நடைபெறுவதினால் அவ்விடத்திலே அவ்வூரவர்களின் செலவுப் பொறுப்பில் 6 பொலிஸ்காரரையும் ஒரு சார்ஜன்டையும் கொண்ட ஒருபொலீஸ் கூட்டத்தார் இந்த ஜூலைமீ 24உ தொடக்கமாக நிறுவப்படுவரென அரசாட்சி கஜற் பத்திரிகை கூறுகின்றது. இப்பொலிசாரின் செலவுமுழுதும் உரும்பராய் பொலிஸ் விதானையின் பராபரிப்பு எல்லைக்குள்ளிருக்கும் குடிசனங்களிடம் அறவிடப்படுமாம்.

இலங்கைத் தானியம்.

இலங்கையிற் பலபாகங்களிலும் விளைகின்ற தானியங்களை வியாபார முறையாக இலங்கையிலே வைப்பதற்காக வேண்டிய வழிவகைகளையும் ஒழுங்குகளையும் திட்டம் பண்ணுமாறு எமது பிரதிதேசாதிபதி பின்வரும் பிரமுகர்களைக் கொண்ட ஒரு சங்கத்தை நிறுவியிருக்கின்றனர்.

1 கௌரவ மிஸ்டர் C. V. பிறேயின் (கீழ்மாகாணத்தலைவர்) அக்கிராசனர்
2 முதலியார் G. W. வம்லிபுரம் J. P
3 மிஸ்ரர் K. கனகசபை
4 ,, M. S. காரியப்பர் (வன்னிமை முதலியார்)
5 மிஸ்ரர் ஜோசெப் A.S. ஆம்ஸ்ரோங்.

தெல்லிப்பழைக் கிராமச்சங்கம்.

நியாயதுரந்தரர் அக்கிராசனரிற் குற்றஞ்சுமத்துகின்றனர்.

மல்லாகம் பொலிஸ்கோட்டிலே நியாயதுரந்தரர் ஸ்ரீ V. குமாரசுவாமி, கிராமச்சங்க அக்கிராசனர் ஸ்ரீ S. சங்கரப்பிள்ளைமீது பின்வரும் குற்றங்களைச் சுமத்தி ஒருவழக்குத் தொடர்ந்திருக்கின்றனர்.

1 அற்றேணிஜெனறலால் தெல்லிப்பழைக் கிராமச்சங்க அங்கத்தவர்கள் மீது தொடரப்பட்ட வழக்கில் அனுப்பட்ட அறிவித்தல்களை அபகரித்தல்.
2 குறித்த வழக்கின் பிரதியை அபகரித்தல்.
3. குறித்த அப்பீல் வழக்கில் உத்தரவாதியாயிருந்த S மூத்ததம்பியினால் சமர்ப்பிக்கப்பெற்ற சத்தியக்கடதாசியை அபகரித்தல், ஆகியவைகளாம்.

இப்பத்திரங்கள் குறித்தவழக்காளியிடம் கொடுபடும்படிக்குத் தெல்லிப்பழைத் தபால் உத்தியோகத்தரிடம் விடப்பட்டது. தபால்சேவகன் குறித்த எதிரியிடம் அவைகளைக்கொடுத்துவிட்டான். குறித்த எதிரி அவைகளை முறையீனமாக அபகரித்தனராம்.

கொழும்பு கதிர்காம யாத்திரிகர் தொண்டர்சபை.

கதிர்காம யாத்திரை, செய்வதின் பொருட்டு இலங்கை இந்தியா முதலிய இடங்களிலிருந்து வருபவர்களின் வசதிக்காக ஷெ சபையார் பின்வரும வசதிகளை ஏற்படுத்தி இருக்கின்றார்கள்:-

யாத்திரிகர் காலைக்கடன், மாலைக்கடன் முடித்தும் அன்னபானாதிகள்செய்தும் இளைப்பாறிப் போவதற்காக, சென்ற வருஷங்களில் ஒழுங்குபண்ணியபடி கொழும்பு மருதானை வோப்ஸ், றோட்டிலுள்ள 64-ம் நம்பர் மண்டபமே இவ்வருஷமும் ஒழுங்குபண்டப்பட்டிருக்கின்றது. பிரமோதூதஸு ஆடிமீ 9உ (24-7-30) முதல் 25உ (9-8-30) வரை முதலாம், இரண்டாம், மூன்றும் வகுப்புப் பிரயாணிகளுக்கு, அப்புத்தளைக்கும் மாத்துறைக்கும் 25 மைலுக்கப்பாலுள்ள புகைரதஸ்தானங்கள் எல்லாவற்றிலும் மலிவுச்சீட்டுகள் விற்கப்படும். இச்சீட்டுகள் ஆடிமீ 31உ (15-8-30) வரை பாவிக்கப்படலாம். மருதானையிலும், கோட்டையிலும் காலையில் வந்திறங்குபவர்கள் அன்று பகல் மாத்துறைக்குப் புறப்படும் வண்டிகளாலும், மாலையில் வந்திறங்குபவர்கள் மறுநாள் மத்தியானத்திற்குமுன் புறப்படும் வண்டிகளாலும் பிரயாணஞ்செய்யலாம். யாத்திரிகர்களை மருதானைப் புகைரதஸ்தானத்திலிருந்து மடத்திற்கு அழைத்துவருவதற்கும் மற்றும் வசதிகள் செய்வதற்குஞ் சபையாரால்ஏற்றஒழுங்குகள்செய்யப்பட்டிருக்கின்றன.

தேகவியோகம்.

யாழ்ப்பாணத்திலே பிரபல புத்தக வியாபாரியாகும் ஸ்ரீ S. S. சண்முகநாதன் அவர்களுடைய தாயார் தமது 85-வது வயதிலே சென்ற வியாழக்கிழமை தேகவியோகமாகிவிட்டனர். இவரது ஈமக்கிரியைகள் ஸ்ரீ சண்முகநாதனவர்களாற் கிரமமாகவுஞ் சிறப்பாகவுஞ் செய்யப்பட்டன.

மாத்துறை தமிழ் ஐக்கிய சங்கம்.

கதிர்காம யாத்திரை செய்வதன் பொருட்டு இலங்கை, இந்தியா முதலிய இடங்களிலிருந்து வருபவர்களின் வசதிக்காகச் சங்கத்தார் பின்வரும் வசதிகளை ஏற்படுத்தி யிருக்கிறார்கள் இம்முறை மாத்துறைப் பிரதானதெருவிலுள்ள 847இல, வீட்டையே மடத்துக்காக ஒழுங்கு பண்ணப்பட்டிருக்கின்றது யாத்திரிகர் யாவரும் இவ்விடத்தில் வந்து தங்கிப்போகுமாறு தாழ்மையாய் வேண்டுகின்றோம் இங்கிருந்து திசமாருமைக்குக் கஷ்டமின்றிப் போய்த்திரும்பக் கூடிய பஸ் ரிக்கற ஒன்றுக்கு 6ரூபா வாகவும் சிறுவர்கள் 5வயதுக்கு மேற்படவும் 10வயதுக்குட்படவும் போய்வரக்கூடிய ரிக்கற் ஒன்றுக்கு ரூபா 3-50சதமாகவும் ஒழுங்குபண்ணப்பட்டிருக்கின்றது. யாத்திரிகர்களை மாத்துறைப் புகைரதஸ்தானத்திலிருந்து மடத்துக்கு அழைத்து வருவதற்கும் மற்றும் வசதிகள்செய்வதற்கும் சங்கத்தாரால் ஏற்ற ஒழுங்குகள் செய்யப்பட்டிருக்கின்றன.

இலங்கையிலே கள்வர் புகுந்து விட்டனராம்.

இந்தியாவில் களவுதொழிலிலே பெயர் படைத்தவர்களும் குறவசாதியாரென அறியப்படுகிறவர்களுமான ஒரு கூட்டம் கள்ளர் தற்போது இலங்கையிலே புகுந்து எலவே தமது கருமம் பார்க்கத் தொடங்கியிருக்கிறார்களெனத் தெரியவருகிறது. இந்தக் குறவர் அதிகமாகச் சென்னைப் பகுதியிலேதான் வசிக்கின்றவர்கள். இவர்கள் நாடோடிகளாய்த் திரிகிறவர்கள். வீடுடைத்துக் கொள்ளையடிப்பதிலும், ஏனைய களவுதொழில்களிலும் திறமை வாய்ந்தவர்கள். ஒவ்வொரு கள்வர் கூட்டமும் பத்துப்பேர் பன்னிரண்டுபேரை யடக்கியது. இவர்கள் மனைவி மக்களும் எப்போதும் இவர்களோடு சேர்ந்து இவர்கள் போகுமிடமெல்லாம் செல்வார்கள். இந்தப் பெண்கள் பாலிலே வீடுவீடாய்ச்சென்று பிச்சையிரந்து அந்தந்த வீடுகளின் நடபடிகளைத் தங்கள் புருஷன்மாருக்குத் தெரிவிக்கவே அவர்கள் தருணங்கண்டு கருமம் பார்ப்பார்கள். இந்திய பொலிசார் இவர்களை அடக்கிவிடுமாறு செய்யாத பிரயத்தனமெல்லாஞ் செய்தும் அனுகூலமதிகம் உண்டாகவில்லை. இந்தத் திருடர்களைந்நூறுபேர்வரையில் சமீபத்திலே தோட்டக் கூலிகள்போல நடித்து இலங்கையையடைந்து கூட்டங் கூட்டமாகப் பிரிந்து களவு நடத்தத் தொடங்கி விட்டார்களாம். ஊவா மத்திய மேல் மாகாணங்களிலே இவர்கள் இப்போது திரிகின்றார்களாம். சிலர் மருதமடுத் திருப்பதிக்குச்சென்று களவெடுத்து அகப்பட்டனராம். காரியமெல்லாம் இப்படியிருப்பதாலே பிச்சைக்கு வரும் பிச்சைக்காரிகள் மற்றும் வடக்கத்தையார் மட்டிலே எவரும் அவதானமாயிருப்பார்களாக! ச-வே-பா-ன்

தந்தவைத்திய விளம்பரம்.

டக்டர் J. S. R. குணவர்த்தன

(கொழும்புத் தந்த வைத்தியன்)

இவ்வைத்தியர் இந்த ஆகஸ்ட் மாதம் 1-ம், 2-ம், 3-ம், 4-ம், 5-ம், 6-ம், தேதிகளில் யாழ்ப்பாணம் முற்றவெளித் தெருவிலிருக்கும் பாடிவீட்டில் வந்து நோயாளரைப் பார்ப்பார்.

(Mic. 8 21 & 31)

ஸம்ஸ்கிருத வித்தியாசாலை விளம்பரம்.

“ஸ்ரீ கமலாம்பிகாஸமேத ஸ்ரீ கயிலாசநாதஸ்வாமி தேவஸ்தான, வேத, ஆகம ஜோதிஷ,காவ்ய,புராண,வித்தியாசாலை”என்னும்,நாமத்தையுடைய வித்தியாசாலையொன்று மேற்படி தேவஸ்தானத்தில் ஸ்தாபிக்கப்பட்டு நிகழும் பிரமோதூதஸு ஆடிமீ க-ந் திகதி தொடக்கம் நடைபெற்று வருகின்றது. சேர விரும்புவோர் இந்த மாதம் ௩௦-ந் திகதி வரையில் விண்ணப்பப் பத்திரம் அனுப்பலாம். அச்சிட்ட விண்ணப்பப் பத்திரங்கள் மேற்படி வித்தியாசாலை ஸ்தாபகர் ப்ரம்மஸ்ரீ ந. வே. கார்த்திகேயக்குருக்கள் அவர்களிடம் எழுத்துமூலமாய் அல்லது அவருடைய காரியாலயத்தில் முகாமுகமாய்ப் பெறற்பாலன.

நல்லூர், 20-7-30.

(M. 1. 21st to 21.8 30.)

எங்கே போகலாம்?

நமது யாழ்ப்பாணவாசிகள் அரிசிகுத்தும் ஆலைகளினுதவியால் அநேக சுகயங்களை அனுபவிக்கின்றனர். எங்கள் கிராமவாசிகள் இந்தச் சுகயங்களைத் தாராளமாய் அனுபவித்தற்கு எங்கே போகலாம்.

சுன்னாகத்து அன்னபூரணி அரிசி ஆலைக்கே போகலாம்? அது தன் வாயிலாகத் தானியங்களைக் குத்தியும் தவிடாக்கியுந் தருகின்றது.

இன்னும் அது அரிசி, நெல், தவிடு விற்பனையுஞ் செய்கின்றது ஆதலால் நாமும் சுன்னாகம் அன்னபூரணி அரிசி ஆலைக்கே போய்ப் பூரணத்தைப் பெறுவோமாக.

(Q. 14) தி.

இந்திய செய்திகள்.

அமெரிக்க அபிப்பிராயம்.

சிக்காகோநகரத்திலிருந்து பிரசுரம்பெறும் “யூனிற்றி” என்னும் அங்கிலப்பத்திரிகை பின்வருமாறு எழுதுகின்றது:—காந்திக்கு விரோதமாகச் சொல்லப்படும் ஒரு குற்றச்சாட்டும், இந்தியாவின் தற்போதைய சனநிலைமையைப்பற்றி பிரிட்டிஷாருக்குரிய ஒரு வாதமும் என்னவெனில், பிரிட்டிஷார் இந்திய நிலைமையைச் சீர்ப்படுத்துவதற்கு ஒரு சமாசம் கூடுவதாகச் சொல்லியும் காந்தி அதை நிராகரித்து விட்டார் என்பதேயாம்........காந்தி சென்ற வருடத்திலேயே சமாசத்திற்கு உடன்படுவோராயிருந்தார் ஆனால் அவரின் உடன்பாடு இந்தியர்களின் சௌகரியத்திற்கு அத்தியந்தம் உடன்பாடான நிபந்தனைகளைக் கொண்டதொன்றாயிருந்தது மகாத்மா, சகல இராஜீயக் கைதிகளுக்கும் விடுதலை கொடுக்கவேண்டும் என ஒன்றும், சமாசத்திலே இந்தியாவுக்கு இராசாதிகாரச் சுயராச்சிய கொடுக்கப்படும் நிபந்தனைகளைப் பற்றியே பேசப்படவேண்டும் என இரண்டாவதும் ஆன நிபந்தனைகளைக் கேட்டிருந்தனர்.

இவ்விரு நிபந்தனைகளும் கொடுபடவில்லை இவ்விருநிபந்தனைகளைப்பற்றித் தாம் எதிர்ப்பதாகவாவது எவ்வித முடிவும் இராசப்பிரதிநிதியால் வெளியாக்கப்படவில்லை ஆகையினால் அந்தச் சமாசம் நடவாமைக்குரிய பொறுப்பு காந்தியிலும் அவரின சகாக்களிலுமுடையதல்ல பிரிட்டிஷாரிலேயே முழுதும் தங்கியிருக்கின்றது அடுத்த ஒக்டோபர் மாசத்தில் கூடவிருக்கும் சமாசத்திலும் இவ்வித நிலைமையே ஏற்பட்டிருக்கின்றது அந்தச் சமாசமும் நடவாது ஒழியும் என்பதே உறுதி. பிரிட்டிஷ் மந்திரிசபை (Cabinet) யாரின் வசதிக்காக, இப்போது இந்தியாவில் நடைபெறும் குழப்பம் நின்று காத்திருக்கவேண்டும் என்பதைச் சிந்தித்துப் பாருங்கள்! காந்தியும் நேருவும் சிறையிலிருப்ப ஒரு வட்டமேசைச் சமாசத்தைத் திட்டஞ்செய்து அழைப்பதைச் சிந்தித்துப்பாருங்கள்! பிரிட்டிஷாரின் தடியடியினால் இந்திய ரத்தம் பிரதிதினமும் சிந்திக்கொண்டிருக்கும் பொழுது சமாசம் கூடுவதென்னும் எண்ணத்தைச் சிந்தித்துப்பாருங்கள்! சைமன் அறிக்கை புத்தியுடையதாய் அல்லது புத்தியற்றதாய் இருக்கலாம். இந்திய நிலைமையில் எவ்வகையான சிறு செய்வதற்கு அது இச்சமயத்தில் தத்துவமுடையதன்று.

டக்டர் அன்னிபெஸன்ற்

லண்டன் 4-7 30.

இந்திய தற்போதைய நிலைமையைக் குறித்து ஆலோசிப்பதற்காகக் கூட்டப்பெற்ற ஒரு கூட்டத்திலே அநேக பாராளுமன்றத்தங்கத்தினரும் இந்திய மிதவாதிகளும் குழுமியிருந்தனர். பெசன்ற் அம்மையார், தினந்தோறும் இந்தியாவில் நடைபெறும் நிகழ்ச்சிகளை அறிய அறியத் தமக்கு பொறுமை குன்றிப்போகிறது, இந்தியாவில் யாது நடைபெறுகிறதென்பதைப் பற்றி ஆங்கிலேயர் எள்ளளவும் சிந்தியாது இருக்கின்றனர், ஆகவே இங்கிலாந்து தன்னைத் தாக்கக்கூடிய நிலைமையொன்று வந்தாலன்றி வேறெதையும் விளங்கிக்கொள்ள மாட்டாதாகையால் அதைப் பகிஷ்கரிப்பதே துணிபு. இப்பொழுது இந்திய மஹாசபை சட்டவிரோதமான சபையென இந்திய அரசாட்சியார் விளம்பரப்பண்ணி விட்டமையாலும் தான் அதில் முன் அக்கிராசனம் வகித்திருக்க உரிமையினாலும் தாம் அகில நிர்வாகசபையில் ஒரு அங்கத்தவரானமையாலும் இந்திய மிதவாதிகள்யாவரும் சனமஹாசபையுடன்சேர்ந்து கொள்வதே உசிதம் என்றும் பேசினர்.

கௌரவ.நடேசய்யரின்மனைவி கைதியாயினர்

இந்தியாவிலே சாத்வீகப் போராட்டத்திற் பங்குபற்றச் சென்றாராகும் இவர் கோயம்புத்தூரிலே 6மாச வெறுங்காவல் விதிக்கப்பட்டனரெனச் சமாச்சாரம் எட்டுகின்றது.

லண்டன் 19 7-30.

லண்டனிலே நடக்கவிருக்கும் வட்டமேசைச் சமாஜத்திற்குப் பிரதிநிதிகள் அக்டோபர்மீ 20உ யளவில் வந்து சேருவார்கள். செனற்ஜேம்ஸ் மாளிகையில் இச்சமாஜம் நடைபெறுமாம்.

லண்டன் 18-7-30

தன்னிஷ்ட தொழிற் கட்சியினராகும் பாராளுமன்றத்து அங்கத்தவர்கள் ஆகஸ்ட்மீ 24-ம் 25-ம் திகதிகளை இந்திய வாரங்கள் என்று குறிப்பிட்டுக் கொண்டாட வேண்டுமெனத் தீர்மானித்திருக்கின்றனர்.

பம்பாய் 18 7-30.

மாகாணத் தேசாதிபதிகள் எல்லோரும் இந்திய இராசப்பிரதிநிதியுடன் அளவளாவி ஆலோசிப்பதற்காக சிம்லாவுக்குச் செல்கின்றனர்.

சென்னை 18-7 30.

மதுரையில் கள்ளுக்கடை மறியல் செய்த 7 தொண்டர்கள் கைதியாக்கப்பட்டனர். ஆங்கு கூடிய சனங்களைக் கலைத்தற்கு பொலிசார் துப்பாக்கிப் பிரயோகஞ் செய்ததில் 4 பேர் காயமடைந்தனர்.

கல்கத்தாவிலே பெண்கள் பாடசாலையை மறியல் செய்துகொண்டு நின்ற 17 சிறுமிகள் கைது செய்யப்பட்டு ஒரு மோட்டர் லொறியில் ஏற்றப்பட்டுச் சென்ற பின் விடுதலை செய்யப்பட்டனர்.

சென்னை 18-7-30

சென்னைச் சிறைச்சாலைகளில் காந்தித் தொப்பி தடை பண்ணப்பட்டிருக்கின்றது

கல்கத்தா 18-7-30

மைமென்சிங் என்ற இடத்திலே இந்துக்கள் முஸ்லீம்களின் வீடுகள் சூறையாடப்பட்டன. இந்தக் கலகக்காரர் எண்மர் உயிர் துறந்தனர். எழுபதின்மர் கைது செய்யப்பட்டனர்

பம்பாய் 18-7-30.

பண்டிட் ஜவஹர்லால் நேருவின் பத்தினியாராகும் கமலாதேவி இந்திய சனமஹா சபையின் வேலைச் சங்கத்தில் அங்கத்தினராக நியமனம் பெற்றனர்.

திருவள்ளுவர். *

தென் இந்தியாவின் செவ்வு குலத்தால் வளர்க்கப்பெற்ற புலவர் பெருமானுகிய திருவள்ளுவர், தமிழ்ப் பாஷையின் வரலாற்றில் ஓர் உச்சமான தானத்தை வகித்திருப்பதல்லாமல், உலகில் இருந்த இருக்கின்ற பெரும் புலமையாளருள் அதி சிரேஷ்டரா யிருந்தனர். இவருடைய புகழ், இவரின் சிந்தனைகட்கும், தொழிலுக்குமிடமாயிருந்த தென் இந்தியாவுடனில்லாது, பரதகண்டத் தெல்லையையுங் கடந்து, ஐரோப்பாவின் புலமையாளர் மனதையுங் கவர்ந்திருக்கின்றது. இவருடைய ஈறுசோந்த நூலாகிய திருக்குறள், ஐரோப்பிய பாஷா விற்பன்னரும், பலகலை வல்லுனருமாகிய பெஜி, ரெயிலர், எலிஸ், உவாட் பேர்சிவல், குரேல், ட்ரூ, போப் முதலியவர்களால் தத்தம் பாஷைகளில் மொழி பெயர்க்கப்பட்டிருக்கிறது. இதற்கு இன்னோர் கொடுத்திருக்கும் மதிப்பு, தமிழ்ச் சாதியத்தாருடைய பண்டைச் சிறப்புக்கும், சீர் திருத்தத்திற்கும் மேலுமோர் சான்றாயிருக்கின்றது.

தமிழ்ப் பண்டிதராகிய டக்டர் போப், தாம் எழுதிய குறள் மொழி பெயர்ப்பின் முகவுரையில் "அரசு மாற்றம், மக்மதியர் கலகம், பிறசாதிக் குழப்பம் ஆதியன அநேக நூற்றாண்டுகளாய் இந்தியாவில் பல மாற்றங்களைக் கொண்டுவந்தும் தமிழ்ச் சாதியத்தார் தம் தொன்மையான மனுஷீக சன்மார்க்க நெறிகளை இழந்துவிடவில்லையென்றும், அவருடைய எதிர்காலம் மிகவுமுன்னதமாய் விளங்குமென்றும், அவரின் ஐரோப்பிய சிநேகிதர், மேலைத் தேசத்தின் கல்வி, அறிவு, ஒழுக்கங்களை அவர்களுக்கு ஊட்டியும், குறளால் கற்பிக்கப்பெற்ற சன்மார்க்க பாடங்களை அழிக்க எதும் வகை கண்டிலார்" என்று கூறியிருக்கிறார்.

மிஸ்டர் ஏரியல் திருவள்ளுவரின் திருக்குறளை "தமிழ் மாது உச்சியிற் றரிக்கும் சூடாமணியெனவும், மனுஷ வகுப்பின் உயர்ந்ததும் தூயதுமான எண்ணங்களைக் கொண்டிருக்கிறது" என்று கூறியிருக்கிறார். மேலும் இவர் கூறுவதாவது:—"இந்த நூலாக்கியோன், தம் அதிசயமுடைய குறளை, சாதிபேதம், மதபேதமில்லாது, மனுஷ வகுப்பின் எத்திறத்தினருக்குமியைந்து பயன் படுமாறு இயற்றி வைத்ததல்லமலும், ஒவ்வோர் வாக்கியங்களும் விலை மதித்தற்கரிய சன்மார்க்க சாதனங்களை நியாயவுணர்ச்சிக்குப் பொருத்தமாய் ஸ்தாபித்து உலகினர்க்கு அவற்றை அவ்வவற்றின் சுயசாரத்தோடும், சேதமில்லாச் செய்கையுடனும் போதித்திருக்கின்றனர்" என்றும், "இவரின் போதனைகளுடைய உண்மையும், உதாரமும் மனுஷகோடியின் வேறுபாடான வாழ்க்கை நிலைக்கு இன்றியமையாத உயர்தரப் பொற் பிரமாணங்களை அடையடையாக வகுத்திருக்கும் பான்மையும், அவை மாட்டடங்கி யிருக்கும் எண்ணங்களின் பூரணப்பிரகாசமும், பாஷை, பா, இலக்கணச் சிறப்புகளும், ஆன்மாவின் பரிபக்குவ விரிவு, சிந்தையின் நுண்ணிய வுணர்ச்சி ஆதியனவும் எவரைத்தான் திகைக்க வையாதுவிடும்" என்பதாகவுங் குறிப்பிட்டிருக்கின்றார்.

இந்த ஞானப் புலவனுடைய திவ்விய பனுவல் ஐரோப்பிய பண்டிதரை வியந்து விதந்து கூறவைத்தது மாத்திரமன்றி, தம் சுய தேசத்திலேயே இதனை அரங்கேற்றுங்காலத்து தமிழ்ச் சங்கப் புலவரால் இதன் விசிட்டம் இசைக்கப்பெற்றது. திருவள்ளுவ மாலையாகிய இந்த நூலின் சாற்றுகவி நாற்பத்தொன்பது வெண்பாக்களைக் கொண்டிருக்கிறது. சங்கப் புலவர் ஒவ்வொருவரும் தத்தம் சாற்று கவியில் குறளின் ஒவ்வோர் சிறப்பை எடுத்தாண்டிருக்கின்றனர். இவர்களோ சாமானியரல்லர். பரமசிவத்துடன் ஓர் செய்யுளைத்தொட்டு நக்கீரர் எதிர்த்து நின்றதுவே இவர்கள் பாண்டித்தியத்துக்கும், நுட்பாராய்ச்சிக்கும், அஞ்சாமைக்கும் தக்க சான்றாயிருக்கின்றது.

இன்னோரின் சாற்று கவிகளும் ஐரோப்பிய பண்டிதரின் புகழ்ச்சிகளும் திருவள்ளுவரின் மாட்சிமையையும் அவருடைய திருக்குறளின் அரிய பெருமையையும் ஆரிடத்தும் பதிய வைக்குமென்பதற்கு யாதுமோர் ஐயமில்லை. இந்த நூல் தமிழ்ச் சாதியாருடைய காலம் வரையறுத்தற்கரிய நாகரீகத்தையுங்கலாஞானத்தையும், வெள்ளிடைமலை போல் விளக்கிக்கொண்டிருக்கின்றது. இந்தப் புலவர் பெருமான் தமது 1330 சூத்திரங்களிலும் பிரதி விம்பித்துக் கொண்டிருப்பதல்லாமல், ஓர் பெரும் புலமையாளனாய், ஞானியாய்த் துறவியாய் விளங்குகின்றார்.

இவருடைய சீவியமும், கற்பனைகளும் தமிழபிமானிகள் விரும்பிக் கற்க வேண்டியனவே. ஆனால் தமிழ் மக்களுக்கோ இவை இன்றியமையாதனவாயிருக்கின்றன. தமிழரின் தொன்மையும், தமிழின் இனிமையும் தைரியம், சாலபு அமையப்பெற்ற சமயிகள் என்பதும் இந்த நூலில் செவ்வே விளங்கக் கிடக்கின்றன. ஆனதன்மையால் தாம் இழந்து போன சிறப்பைத் திரும்பவும் பெற்றுக்கொள்ள திருக்குறள் நூல் முக்கியமான படிப்பும் சேமமான ஊன்றுகோலாயுமிருக்கின்றது.

திருவள்ளுவரின் பிறப்பு, சீவியம் ஆதியன தமிழ்நாட்டுப் புலவர் பெரும் பாலரினதுபோல மறைவிடமாகவேயிருக்கின்றது. இந்தத் தன்மை முற்காலத்தில் சீவிய சாத்திரங்களை எழுதிவையாததால் பெறப்படுகின்றது. பண்டையிலிருந்த வித்துவான்கள் தம்புகழ், பெருமைகளைச் சிறிதேனுங் கவனியாது பிறர் பொருட்டே சீவித்தார்கள். அவர்கள் தம்மை மட்டு கூடங்களிலிருத்தாது, தங்கள் விலை மதித்தற்கரிய நூல்கள் மூலமாகவே தங்களை இன்னும் பிறவாச் சந்ததியாருமறிய வைத்திருக்கின்றனர்.

இங்ஙனமாகினும், சிலப்பதிகாரம், மணிமேகலை, புறநானூறு ஆகிய நூல்களாதாரமாக இவர் கிறிஸ்துவுக்குப்பின் முதலாம் நூற்றாண்டில் சீவித்திருக்க வேண்டுமென்று தணியக் கிடக்கிறது. எனின், மேற் கூறிய நூலாசிரியர் குறளிலிருந்து தங்கிரம் தங்களுக்கு மேற்கோள் எடுத்திருக்கின்றனர். சிலப்பதிகாரத்தில் "முற்பகற் செய்தான் பிறன்கேடு, தன்கேடு பிற்பகற்காண்குறூஉம் ..." என்னும் பிரமாணம் திருக்குறளில், "பிறர்க்கின்னா......" என்பதனுற் காண்க. மணிமேகலையில் "தெய்வம் தொழாஅள், கொழுநற்றொழுவாளைத், தெய்வம் தொழுந் தகைமை திண்ணமார்........." என்பது வள்ளுவரின் "தெய்வம் தொழாள்......" என்பதனுல் எடுக்கப்பட்ட பிரமாணமாய்த் தெரியப்படுகிறது. மேலும்,

"மாபெரும் பூதம் தோன்றி மடக்கொடி
நீகேளென்றே சேயிழைக் குரைக்கும்
தெய்வம் தொழாள்..................
பெய்யெனப்...............பெனு
பொய்யில் புலவன் பொருளுரை தேராய்"

என்னுஞ் செய்யுளில், பொய்யாப் புலவனைச் சுட்டிக்காட்டி யிருப்பதால், இவர்களிலும் வள்ளுவர் பல ஆண்டுகளுக்கு முன்னிருந்தாரென்பது அறியக் கிடக்கின்றது. இன்னும் கடைசி மதுரைத் தமிழ்ச்சங்கத்துடைய காலத்திலும், இவரின் காலத்திலிருந்த புலவர்களுடைய காலவரையறவாலும், ஒருவாறு நிச்சயிக்கக் கூடியதாயிருக்கின்றது. முதலாம் நூற்றாண்டில் ஔவை இருந்தாரென்பது புறநானூறு, அகநானூறு குறுந்தொகை ஆகிய நூல்களால் செவ்வே தணியக் கிடக்கின்றது. இனி, ஔவையார் கற்பனைகளுக்கும், வள்ளுவருடைய கற்பனைகளுக்குமிடையே ஓரே தன்மைத்தான சாரம் அமைதல் காண்க.

ஒருவாறு வள்ளுவருடைய வயதை நிச்சயித்தோம். அவர் பெற்றோர், வளர்ப்பு ஆதியனவற்றை விசாரிப்பாம். கபிலர் அகவலில்:—

"அருந்தவ மாமுனியாம் பகவற்கு
கருவூர்ப் பெரும்பதிகட் பெரும் புலைச்சி
ஆதிவயிற்றி லன்றவதரித்த
கான்முளையாகிய கபிலனும் யானே
என்னுடன் பிறந்தா ரெத்தனைபேரெனின்
ஆண்பால் மூவர் பெண்பால் நால்வர்
....
தொண்டமண்டலத்தில் வண்டமிழ்
மயிலைப்பறையரிடத்தில்வள்ளுவர்வளர்ந்தார்"

என்று கூறியிருப்பதால், தந்தை,தாய்,வளர்ப்பு ஆதியன அறிந்தோம்.

வள்ளுவருடைய தாய், தந்தையர்க்கிடையிலிருந்த ஓர் பொருத்தனையின் பேறால், பிள்ளைகள் பிறந்தவிடத்திலேயே, அவர்களை விட்டுச் செல்லவேண்டியிருந்ததும், அங்ஙனம் பிரியவிருந்ததை யிட்டு துயரடைந்த மாதாவுக்கு வள்ளுவர் சொல்லிய வெண்பா, "எவ்வுயிருங் காக்க ஒரு ஈசனுண்டோ......" என்பதாம். இந்த நிலைமையில் இவரைப் பறையர் எடுத்து வளர்த்தமட்டும் இவர் சீவியத்தில் நாமறியக் கூடியதாயிருக்கின்றது.

இன்னும் நாம் உற்றுநோக்க வேண்டியதொன்றுண்டு. ஔவையார் தம் சாற்று கவியாக இடைக்காடரின் பாடலில் "கடுகை" 'அணுவை" என மாற்றியதற்கு ஒரு பெரிய நியாயமிருக்கிறதாகத் தோற்றுகிறது. ஔவையார் தாமே பெரும் புலமை வாய்ந்தவராயிருந்தும் இங்ஙனஞ் செய்தது பின்னுற்கூறுங் காரணத்தாலென்று சொல்லக் கிடக்கின்றது. நூலியற்றுபவர் கவனிக்கவேண்டிய முறைகளென இலக்கண நூலாசிரியர் கூறிய தொகுத்துச் சுட்டல், வகுத்துக் காட்டல், முடித்துக் காட்டல் என்னும் விதிகளை வள்ளுவர் தம் நூலில் பெரிதுமுபயோகப்படுத்தி யிருக்கின்றார். குறளின் ஒவ்வொரு அதிகாரமும் பத்துச் சூத்திரங்களைக் கொண்டதாயிருக்கின்றது. இந்தப் பத்தும் மேற்கூறப்பட்ட விதிகளுக்கு அமைந்ததாயிருக்கின்றன. முதலஞ் சூத்திரம் தொகுத்துச் சுட்டலாயும் ஏனைய ஏழும் வகுத்துக் காட்டலாயும், இறுதிக்கண்ணின்ற இரண்டும் முடித்துக் காட்டலாயும் விளங்கி நிற்கின்றன. ஆகவே முதலாவது சூத்திரம் கடுகுக்கு உவமிக்கப்பட்டும், ஏனைய ஏழும் ஏழ் கடலுக்கு உவமிக்கப்பட்டும், தொகுத்துக்காட்ட கடைக்கண்ணின்ற இரண்டும் கடுகை இருபாதியாக்கப்பட்டதாயும்—இதுவே "கடுகைத் துளைத்து"......என்பதற்குப் பொருளாய் காணப்படுகிறது. இச்சச் சிறப்பு இச் செய்யுளில் அமைந்திருப்பதவேயே ஔவையார் இதனையும் வகைக்கவேண்டி இங்ஙனஞ்செய்தாரென்பது பெறப்படுகின்றது. நிற்க,

வள்ளுவர் இல்லாச்சிரமத்தில் அதன் அனைத்து சுகுணங்களையெல்லாம் பெற்று வாழ்ந்தாரென்பது வெகுமதிக்கவொன்றேயாம். இவர் இளம்பிராயத்தொட்டு மிக மேலான மனப்பயிற்சி, ஆத்ம பயிற்சி யுடையவரென்பதற்கு ஐயமேயில்லை. மனை வாழ்க்கையைப்பற்றி திருவள்ளுவர் கூறியிருக்கும் அதி தூய நெறிகள் ஒவ்வொருவராலும் பூரண ஆவலுடன் கற்கப்படவேண்டியனவாயிருக்கின்றன. ஐந்தாம் அதிகாரம் தொட்டு 25வரையில் இவர்கள் ஒழுக்கமும், கடமையுமே கூறப்பட்டிருக்கின்றது.

வள்ளுவரின் மனையாளாகிய வாசுகி என்பார் பெண்களுக்கோர் அணியாயிருந்தார். இவரை நாயனார் தம் வாழ்க்கைத்துணையாகத் தெரிந்தெடுத்த விதம் எவருக்கும் அதிசயத்தை விளைக்கக்கூடியதே. வள்ளுவனை விவாகஞ் செய்துகொள்ளுமாறு கேட்டபோது மண்ணில் சோறு, கறி சமைத்தளிப்பாளேயே தாம் மணந்துகொள்ளுவதாகக் கூறினர். வாசுகி அவ்வாறு செய்தே அவருக்கு மனையாளானார். இது கட்டுக்கதையல்ல. விசுவாசம், அன்புள்ளவர் இதினிலும் பெருங் கருமங்களைச் செய்து முடிப்பார்.

வள்ளுவரிடம் இல்லறமோ, துறவறமோ விசிட்டமுடைத்தென்பதைக் கேட்குமாறு சென்றிருந்த ஒருவருக்கு இவர் யாதும் வாய் பேசாது தம்மனையாள் நடபடிக்கையால் விளங்க வைத்தனுப்பினர் என்பது எவருந் தெரிந்த விஷயமே. வாசுகி தன் சீவியகாலம் முழுவதும் தன் கணவனுக்கு ஓரே கீழ்ப்படிவாயிருந்தனர். இவ்வித கட்டுப்பாடு மேலைத்தேசப் பெண்களைப் பின்பற்றி ஒழுகும் எம் பெண்பாலாருக்கு அதிக நகைப்பிற்கிடனுயிருக்கும். சீதை, சாவித்திரி, கண்ணகை, வாசுகி ஆதியோர் முன்மாதிரியே இகபரமிரண்டிற்கும் துணைக்கோடலாயிருக்கும். வாசுகி இறந்த பொழுது வள்ளுவர் கூறிய பிரலாப வெண்பா......"அடிசிற்கினியாளே........." என்பது எத்துணைச் சிறப்புடைத்து?

இது இவ்வளவில் நிற்க: வள்ளுவர் இயற்றிய நூல்களைப்பற்றிச் சில கூறுவாம். இவரால் எழுதப்பெற்றவை குறளும்,ஞானவெட்டியானு மேயாம். குறள் சன்மார்க்கம், செல்வம், அன்பு என்பவற்றை விரிவாய் ஓதுகின்றது. வீட்டைப்பற்றி வள்ளுவர் கூறுதொழிந்தது எனெனில் அவர் தம் நூலை மனுஷ வகுப்பின் எத்திறத்தினர்க்குமாக எழுதியமையாலும், வீட்டைப்பற்றி எல்லாரும் ஓரே தன்மைத்தான கொள்கையுடையரல்லர் என்பதனுலுமே என்று பலர் அபிப்பிராயப்படுகின்றனர். கடவுள், மழை, சன்மார்க்கத்தின் தைரியம் துறவின் விசிட்டம் 1-4அதிகாரத்தாலும், 4—25வரையும் இல்வாழ்க்கை விருந்தோம்பல், இனியகூறல், தன்னடக்கம், பொறுமை முதலியனவும்,25-37வரை துறவின் தூய்மை, அவாவறுத்தல், விரதங் காத்தல், ஆதியனவும், 38விதியைப்பற்றியும், 39-83அரசச் சிறப்பு, அணி, அரண் ஆதியனவும், 83-95இராணுவம், வரிகோள்முறை என்பனவும், 96-108மானம், பெருமை, உருத்து முதலியனவும், 108-133குடும்ப இன்பானுபவமுமே கூறப்பட்டிருக்கின்றது. இங்ஙனமாக, திருவள்ளுவர் சர்வ உலகத்தையும் தம் நூல் மாட்டடக்கி தம்மை ஒப்பாரும், மிக்காருமில்லாது பிரகாசிக்கின்றனர்.

ஞானவெட்டியான் தேகதத்துவம், பிராணயாமம், யோகம் ஆதியனவற்றைக் கூறுகின்றது. திருவள்ளுவர் ஓர் உயர்ந்த சிவன் முத்தரென்பதற்குச் சான்று இந்த நூலிலும் காணப்படுகின்றது.

இத்துணை அரும்பெருஞ் சிறப்பு வாய்ந்த திருவள்ளுவரின் திருக்குறளை ஒவ்வொருவரும் விரும்பிக் கற்கவேண்டியது அகத்தியத்திலகத்தியமே,

8—7—30

V. S. T.
புத்தூர்.

---

* இது காலஞ் சென்ற எமதரிய ஆசிரியர் ஸ்ரீ R R குணரெத்தினம் அவர்கள் இந்துசாதனத்தின் 25-வது வருஷ பூர்த்திக்கொண்டாட்டப் பிரசுரத்திற்கு எழுதிய இம்மகுடத்தைக் கொண்ட ஆங்கில வியாசத்தின் மொழிபெயர்ப்பு மேற்படி ஆசிரியர் அவர்களின் நன்றி நிறைந்த ஞாபகார்த்தமாகவும், விஷயத்தின் சிறப்பு நோக்கியும் வெளியிடப்பட்டிருக்கிறது,

---

விளம்பரம்.

கீழ்க்கண்ட விலாசத்தில் மங்களூர் கொழுக்கி ஓடுகள் (Mark Alvares & Co) பெருந்தொகையில் விற்பனவுக்காக வைக்கப்பட்டிருக்கின்றன.

இங்ஙனம்,
சி குமாரசாமி,
வர்த்தகர்,
வல்வெட்டித்துறை.
(Mis 10 17, 21. 24 28.)

ஐவாஷிருல் முபர்ரா லேகியம்.

ஓரேவேளையில் பரீட்சை பார்க்கலாம்.

பலமில்லாமல் தளர்ந்து சோர்வடைந்த நரம்புகளையும் உலக வாழ்க்கையில் பிரியமில்லாமல் சஞ்சலப்படும் மனதையும் ஒரே வேளை லேகியம் சாப்பிட்ட பிறகு ஆச்சரியப்படும்படி நரம்புகளுக்குப் பலமும் திமிரும் உண்டாகும்.

பரீட்சைக்கும்பலனுக்கும் உத்தரவாதமுள்ள சத்திய அவுஷதம். சொர்ப்பன ஸ்கலிதம், துரித ஸ்கலிதம், பற்பல வாய்வு ரோகங்கள், இடுப்புவலி, கைகாலசதி, மலச்சிக்கல்பசிமந்தம் தேக காங்கையில் நீற்றுப்போகும் பலஹீனங்கள் முதலிய யாவற்றையுங் குணப்படுத்தும். பத்தியமில்லை. உபயோக விபரம் மருந்துடன் வரும். வி. பி. வேறு

20நாள் 40வேளை டப்பி 1க்கு விலை ரூ 4-
10நாள் 20வேளை டப்பி 1க்கு விலை ரூ 2

மேலே சொல்லப்பட்ட வியாதிகளை
இதில் சொல்லப்படாத வியாதிகளையும் க
டிக்கும். அசல் சத்தியவாக்குள்ள (சிட்
குருவி) மாத்திரைகள் 16கொண்ட டப்பி1க்
விலை ரூபா 5-00. கைகண்ட பலன்.

வி. பி வேறு.
K V Vsppadurai & Co
Portonovo
S. I.
(M. 78 3—4-8-30)

தங்க மெடல்கள் பெற்ற
ஐரோப்பிய மதுரைக் கம்பனியாரால்
செய்யப்படும்
திறமான குடை அடையாளமுள்ள
கொழுக்கி ஓடுகள்.

மதுரைக் கம்பனியார் சிறந்த குடை அடையாளமிட்டு இந்த ஓடுகளை வெகு பணிக்கராய் அமைத்திருக்கிறார்கள். வெயில், மழை, நெருப்புக்கு இதிலும் மேலான பாதுகாப்பு உபகாரணம் வேறொன்றில்லை. பல தொழில் நிபுணரின் பரிசோதனையால் இதன் இயற்கை மெச்சப்பட்டது. இதுவரை 10 தங்க மெடல் பரிசுக்குக் கம்பனியாரைத் தகுதியுடையாராக்கிப் புகழ்பெற்றது. மிக இலேசானது. மலிவானது. ஒவ்வொரு ஓட்டிலும் குடை அடையாளம் விளங்கும். காங்கேசன்துறையிலே நவமாகக் கட்டப்படும் அரசினரின் சுகஸ்தான கட்டடங்களுக்கென இக்குடை அடையாளமுள்ள 55,000 ஓடுகள் பாவிக்கப்பட்டிருக்கின்றன.

இந்த இனத்திலே கண்ணாடி ஓடுகளுமுண்டு.

ஜே. செருபிம் அன்ட் பிறதர்.
ஏசண்டர், பெரியதெரு,யாழ்ப்பாணம்.
(Y. 70. 11-8 30.)

ஒஸ்ரின்! ஒஸ்ரின்!! ஒஸ்ரின்!!!
மிகவிலைகுறைந்தது! நீடித்து உழைக்கக்கூடியது.



மோட்டர்ரதங்கள் விற்பனை.

ஒஸ்ரின், டொட்ஜ், டிசொற்றோ, முதலிய இரதங்கள்; வார்கோ, டொட்ஜ், மொறிஸ் முதலிய பஸ்களும், லொறிகளும்;

டக்லாஸ், ஏ. ஜே. எஸ். சாரேலியா மோட்டர்சைக்கிள்களும், சாதாரண சைக்கிள்களும் எம்மிடத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

பாவித்த மோட்டர்ரதங்கள் மாற்றிக் கொடுக்கப்படும். எல்லாவித மோட்டார்சாமான்களுங் கிடைக்கும்.

கந்தோர்கள்,
(1) இரத்தினபுரி.
(2) 11 அவொன்டேல்தெரு, கொழும்பு.
(3) கொட்டடி, யாழ்ப்பாணம்

K. S. இராஜலிங்கம்,
மெசர்ஸ் வாக்கர் சன்ஸ் கம்பெனியின் ஏஜென்ட்;
இரத்தினபுரி.

(Y 1. 14 7-30—13 7-31.)

வான்முகில் வழாதுபெய்க மலிவளஞ் சுரக்க மன்னன், கோன்முறை யரசுசெய்க குறைவிலா துயிர்கள்வாழ்க, நான்மறை யறங்களோங்க நற்றவம் வேள்விமல்க, மேன்மைகொள் சைவநீதி விளங்குக வுலகமெல்லாம்,

Printed & published by Pandit V. T. Sambhandan for and on behalf of the Proprietors, the Jaffna Siva Paripalana Sabai, at their Press the Saiva Prakasa Press, Vannarponnai.